
ஔவையார் அருளிச் செய்த

# மூதுரை என்று வழங்குகின்ற

# வாக்குண்டாம்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் திருத்தப்பட்ட உரையுடன்





இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இந்துசமய அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# ஔவையார் அருளிச் செய்த
# மூதுரை என்று வழங்குகின்ற
# வாக்குண்டாம்



## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின்
## திருத்தப்பட்ட உரையுடன்



**வெளியீடு**
இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஔவையார் அருளிச் செய்த மூதுரை என்று வழங்குகின்ற வாக்குண்டாம் |
| பதிப்பு | : | *2018* |
| பக்கம் | : | viii + 32 |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ்<br>ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி |
| விலை | : | ரூபா 65/- |
| வெளியீடு | : | இந்துப் பண்பாட்டு நிதியம் |
| ISBN No. | : | ***978-955-9233-85-5*** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சைவமுந் தமிழும் எம் மண்ணில் நிலைத்து நிற்பதற்கு அயராது உழைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். அப்பெரு மகனார் எமது சமூகம் நீதிநெறி வழுவாது வாழ்வதற்காக அரிய நீதி நூல்களை அச்சேற்றி வெளியிட்டார்கள். நீதிநெறி சீராகப் பேணப்படாவிட்டாற் சமூகஞ் சீரழிந்துவிடும். இதனை நன் குணர்ந்த நாவலர் பெருமான் எதிர்காலத்திலே எமது குழந்தைகள் மனனஞ் செய்வதற்கேற்ற முறையிற் தொகுத்து வெளியிட்டார்கள். சிறு குழந்தைகளுக்கு ஏடு தொடக்கப்பட்ட பின்பு நீதி நெறிகளைக் கற்பிப்பது சைவத் தமிழர் மரபாகும். உயிரெழுத்துக்களைக் கற்ற பின், உன்னதமான வாழ்வுக் குகந்த உயரறங்களை அன்று போதித்தனர். உதாரணமாக 'அ' கற்றவுடன் "அறஞ் செய விரும்பு என்று சொல்லிக் கொடுக்கப் படுகிறது அறத்தை, ஒழுக்கத்தை உயிராக நேசித்தல் வேண்டும் என்பதே இதன் அர்த்தம், மேலைத்தேயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலைகளுக்கு இன்று மனித நேயக் கருத்துக்களைப் புகட்ட வேண்டுமென முன்வந்துள்ளார்கள். ஆனால் நாவலர் பெருமான் 19ஆம் நூற்றாண்டிலேயே உயர்ந்த மனிதநேயக் கருத்துக்களை நீதி நூல்கள் வாயிலாக எஞ்சமூகம் அறிவதற்கு ஏற்பாடு செய்தார்கள். இந் நூலிற் காணப்படும் அறச் சிந்தனைகள் அற்புதமானவை. அவற்றை நாம் படித்து இப் பிறவியின் பயனைப் புனிதமாகப் பேணுவோமாக. இந் நூல்களை எஞ்சமூகத்துக்காக மீளப் பதிப்பித்துதவும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நற்பணி நன்றிக்குரியது. இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் அவர்களது ஆர்வமும், திணைக்கள உத்தி யோகத்தர்களின் முயற்சியும் எமது சமூகத்திற்குப் பேருத வியாக அமையுமென்பதில் ஐயமில்லை.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்(கு) அணி

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்,**
*தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை*
*தலைவர் - சிவபூமி அறக் கட்டளை, இலங்கை*
*உபதலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

நல்ல கல்வியைக் கொடுப்பதில் நாட்டங் கொண்டிருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள், ஔவையார் அருளிய நீதி நூல்கள் மற்றுஞ் சிவப்பிரகாசர் இயற்றிய நன்னெறி ஆகிய நூல்களுக்கு உரை எழுதித்தாந் தொடக்கிய சைவப்பிரகாச வித்தியாசாலைகளிற் கற்பித்தார்கள். அந் நூல்களைத் தமது வித்தியானுபாலன அச்சியந்திரசாலையில் 1853 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டார்.

நீதி நூல்களைக் கற்று அதற்குத் தகுந்தாற் போல நடந்து கொண்டு தம் வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டவர்கள் பலர். இளம் பராயத்தில் நீதி நூல்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். நீதி நூல்களை நாம் கற்பதால் அவை எம்மை அறநெறி தவறாமல் வாழ வகை செய்யவல்லது. இதற்குத்தக்க எடுத்துக்காட்டு ஔவையாரின் மூதுரை என்னும் இந் நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சுபீட்சமான வாழ்வு, இன்றைய இளஞ் சந்ததியினருக்கு, நாளைய உலகிற் கிடைக்க ஏதுவாக, இன்றே அவர்களின் மனங்களில் அறப் பண்புகள் விதைக்கப்பட வேண்டும். அதற்கு இத்தகைய நூல்களை மாணவர்கள் வளரும் இளம் பருவத்திலேயே கற்றுணர வகை செய்ய வேண்டும். இதற்குப் பெற்றோர்களும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் ஆக்கமும் ஊக்கமும் நல்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்**
*பணிப்பாளர்.*
*இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் வரலாறு



ஔவையார்
என்பதற்குத் தாய் போன்ற
மூத்த பெண்மணி என்னும்
பொருள் உண்டு.
ஔவையார் என்ற
பெயரைத் தமிழ் உலகில்
அறியாதவர் எவரும் இலர்.
ஔவையார் என்ற பெயரிற்
பல பெண்பாற் புலவர்கள்
வாழ்ந்துள்ளார்கள் என
வரலாற்று ஆய்வாளர்கள்
கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கப் புலவர்களுட் பெண்பாற் புலவர்கள் முப்பது பேர் இருந்தார்கள். அவர்களில் ஔவையார் என்பவரும் ஒருவர். பாரி, அதியமான் என்னுந் தலைவர்களோடுஞ் சேர, சோழ, பாண்டியரோடும் பழகியவர். அதியமான் என்னுந் தகடூர் அரசனுடன் மிக இறுக்கமான நட்புப் பூண்டிருந்தார். அதியமா னுக்குந் தொண்டைமான் என்ற அரசனுக்கும் பகை மூண்ட போது அதியமானுக்காகத் தூது சென்று போரைத் தடுக்க முயன்றார். ஆயுள் நீட்டிப்புக்காகத் தனக்குக் கிடைத்த நெல்லிக் கனியை ஔவையாருக்குக் கொடுத்தவன் அதியமான்.

சங்க காலத்துப் புலவரான ஔவையார் புறநானூற் றிலுந் தொகை நூல்களிலும் ஐம்பத்தொன்பது பாடல்கள் பாடியுள்ளார். இதை விட நாயன்மார்கள் காலத்திலுஞ் சிவபக்தி உடைய ஔவையார் வாழ்ந்தார் என்று வரலாற்றுக் கதை உண்டு. மேலுங் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலானவர்களின் காலத்தில் வாழ்ந்த ஔவையார் ஒருவர். இவரே தமிழ் இலக்கிய உலகிற் பெரும் புகழ் பெற்றவர். இவரே ஆத்திசூடி முதலான நீதி நூல்களைப் பாடியவர். இவரைவிட "ஞானக் குறள்" என்னும் நூல் பாடிய ஔவையாரும் பிறிதொரு நபர் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்
கணபதி துணை

# ஔவையார் அருளிச் செய்த

# மூதுரை என்று வழங்குகின்ற வாக்குண்டாம்

## மூலமும் உரையும்



### காப்பு

**வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்**
**நோக்குண்டா மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை : துப்பு ஆர் திருமேனித் தும்பிக்கையான் பாதம் - பவளம் போலும் (சிவப்பாகிய) திருமேனியையும் துதிக்கையையும் உடைய விநாயகக் கடவுளுடைய திருவடிகளை, பூக்கொண்டு - பூவைக் (கையிலே) கொண்டு, தப்பாமல் சார்வார் தமக்கு - தவறாமல் அடைந்து பூசை செய்வோருக்கு, வாக்கு உண்டாம் - (நல்ல) வாக்கு உண்டாகும், நல்ல மனம் உண்டாம் - (நல்ல) மனம் உண்டாகும், மா மலராள் நோக்கு உண்டாம் - பெருமை பொருந்திய செந்தாமரைப் பூவில் இருக்கின்ற சீதேவியினுடைய அருட்பார்வை உண்டாகும், மேனி நுடங்காது - (அவருடைய) சரீரம் (பிணிகளால்) வாடிப்போகாது என்றவாறு.

பொருள் : பவளம் போலுஞ் சிவப்பாகிய திருமேனியையுந் துதிக் கையையும் உடைய விநாயகக் கடவுளுடைய திருவடிகளைப் பூவைக் கையிலே கொண்டு, தவறாமல் அடைந்து பூசை செய்வோருக்கு நல்ல வாக்கு உண்டாகும், நல்ல மனம் உண்டாகும், பெருமை பொருந்திய செந்தாமரைப் பூவில் இருக்கின்ற சீதேவியினுடைய அருட்பார்வை உண்டாகும், அவருடைய சரீரம் பிணிகளால் வாடிப்போகாது.

இதனது தாற்பரியம் : விநாயகக் கடவுளுடைய திருவடிகளைப் பூசிப்பவருக்குக் கல்வியும் நல்ல மனமுஞ் செல்வமும் ஆரோக்கியமும் உண்டாகும் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி**
**என்று தருங்கொ லெனவேண்டா - நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான்றருத லால்**

பதவுரை : நின்று தளரா வளர்தெங்கு - நிலைபெற்றுச் சோராமல் வளர்கின்ற தென்னை மரமானது, தாள் உண்ட நீரை - (தன்) அடியினாலே உண்ட (வெறு) நீரை, தலையாலே தான் தருதலால் - (தன் முடியினாலே மதுரமாகிய இளநீராக்கித்) தானே தருதலினால், ஒருவற்கு நன்றி செய்தக் கால் - (நற்குணமுடைய) ஒருவனுக்கு ஒரு உப காரத்தைச் செய்தால், அந்நன்றி என்று தரும் கொல் என வேண்டா - அந்த உபகாரத்தை (அவன்) எப்பொழுது செய்வானோ என்று சந்தேகிக்க வேண்டுவதில்லை.

பொருள் : நிலைபெற்றுச் சோராமல் வளர்கின்ற தென்னை மரமானது, தன் அடியினாலே உண்ட வெறுநீரைத் தன் முடியினாலே மதுரமாகிய இளநீராக்கித் தானே தருதலினால் நற்குணமுடைய ஒருவனுக்கு ஒரு உபகாரத்தைச் செய்தால், அந்த உபகாரத்தை அவன் எப்பொழுது செய்வானோ என்று சந்தேகிக்க வேண்டு வதில்லை.

இதனது தாற்பரியம் : நற்குணமுடையவனுக்கு உபகாரஞ் செய்தால் அவன் அதனினுஞ் சிறந்த உபகாரத்தை வணக்கத்தோடு விரைந்து செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்**
**கன்மே லெழுத்துப்போற் காணுமே - யல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகார**
**நீர்மே லெழுத்திற்கு நேர்**

பதவுரை : நல்லார் ஒருவர்க்குச் செய்த வுபகாரம் - நற்குண முடைய வராகிய ஒருவர்க்குச் செய்த உபகாரமானது, கல் மேல் எழுத்துப் போல் காணும் - கல்லின் மேல் எழுதப்பட்ட எழுத்தைப் போல விளங்கும். அல்லாத ஈரம் இலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம் - மற்ற அன்பில்லாத மன முடையவருக்குச் செய்த உபகாரமானது, நீர்மேல் எழுத்திற்கு நேர் - சலத்தின் மேல் எழுதப்பட்ட எழுத்துக்கு ஒப்பாகும்.

ஏ – அசை.

பொருள் : நற்குணமுடையவராகிய ஒருவர்க்குச் செய்த உபகாரமானது கல்லின் மேல் எழுதப்பட்ட எழுத்தைப் போல விளங்கும். மற்ற அன்பில்லாத மனமுடையவருக்குச் செய்த உபகார மானது, சலத்தின் மேல் எழுதப்பட்ட எழுத்துக்கு ஒப்பாகும்.

இதனது தாற்பரியம் : நல்லவருக்குச் செய்த உபகாரம் என்றும் நிலை பெற்று விளங்கும்; தீயவருக்குச் செய்த உபகாரஞ் செய்த அப்பொழுதே அழிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்**
**இன்னா வளவி லினியவு - மின்னாத**
**நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே**
**ஆளில்லா மங்கைக் கழகு**

பதவுரை : இளமை வறுமை வந்து எய்தியக்கால் இன்னா - (இன்பத்தைத் தருகின்ற) இளமைப் பருவமானது வறுமை வந்து அடைந்தால் துன்பத்தைத் தருவதாகும், இன்னா அளவில் இனியவும் இன்னாத - துன்பத்தைத் தருகின்ற முதுமைப் பருவத்தில் இனியனவாகிய பொருள்களும் துன்பத்தைத் தருவனவாம், (அவைகள்) நாள் அல்லா நாட்பூத்த நல்மலரும் - சுப காலமல்லாத காலத்திலே பூத்த நல்ல பூவையும், ஆள் இல்லா மங்கைக்கு அழகும் போலும் - அநுபவிப்பவன் இல்லாத மங்கைப் பருவத்தையுடையவளுக்கு உண்டாகிய அழகையும் போலும்.

பொருள் : இன்பத்தை தருகின்ற இளமைப் பருவமானது வறுமை வந்து அடைந்தால் துன்பத்தைத் தருவதாகும். துன்பத்தைத் தருகின்ற முதுமைப் பருவத்தில் இனியனவாகிய பொருள்களும் துன்பத்தைத் தருவனவாம். அவைகள் சுப காலமல்லாத காலத்திலே பூத்த நல்ல பூவையும் அநுபவிப் பவன் இல்லாத மங்கைப் பருவத்தையுடையவளுக்கு உண்டாகிய அழகையும் போலும்.

ஏ - அசை, இன்னா - துன்பம், இன்னாவளவு - முதுமைப் பருவம்.

இதனது தாற்பரியம் : வறுமையோடு கூடிய இளமையும், முதுமையோடு கூடிய செல்வமும் பயன்படாது; துன்பஞ் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்**
**நட்டாலு நண்பல்லார்* - நண்பல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்**

பதவுரை : பால் அட்டாலும் சுவையில் குன்றாது - பாலானது (தன்னைக்) காய்ச்சினாலும் (தன்) மதுரத்திற் குறையாது மிகும், சங்கு சுட்டாலும் வெண்மை தரும் - சங்கானது (தன்னை நீறாகச்) சுட்டாலும் (மிகுந்த) வெள்ளை நிறத்தையே கொடுக்கும், (அவை போல) மேன்மக்கள் கெட்டாலும் மேன்மக்களே - மேலோர் (தாம் தம்முடைய சிநேகராலே) கெட்டாலும் (தம்முடைய நற்குணம் வேறுபடாமல்) மேலோராகவே விளங்குவார், நண்பு அல்லார் அளவளாய் நட்டாலும் நண்பு அல்லர் - சிநேக குணம் இல்லாத கீழோர், (தம்மோடு ஒருவர்) கலந்து சிநேகித்தாலும் சிநேகராகார்.

பொருள் : பாலானது தன்னைக் காய்ச்சினாலுந் தன் மதுரத்திற் குறையாது மிகும், சங்கானது தன்னை நீறாகச் சுட்டாலும் மிகுந்த வெள்ளை நிறத்தையே கொடுக்கும், அவைபோல மேலோர் தாந்தம்முடைய சிநேகராலே கெட்டாலுந் தம்முடைய நற்குணம் வேறுபடாமல் மேலோராகவே விளங் குவார். சிநேக குணம் இல்லாத கீழோர், தம்மோடு ஒருவர் கலந்து சிநேகித்தாலுஞ் சிநேகராகார்.

இதனது தாற்பரியம் : மேலோர் தஞ்சிநேகராலே தமக்குக் கேடு வந்த விடத்தும், அவருக்கு நன்மையே செய்வர். ஆதலின் அவரோடு தானே சிநேகித்தல் வேண்டும்.

* தொல்காப்பிய பொருளதிகாரத்துச் செய்யுளியலிலே "வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்" என்னுஞ் சூத்திரத்துரையிலே நச்சினார்க்கினியர் வெண்பாவினிடையினும் முச்சீரடி சிறுபான்மை வருமெனக்கூறி இவ் வெண்பாவையே உதாரணமாகக் காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி**
**எடுத்த கருமங்க ளாகா - தொடுத்த**
**உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்**
**பருவத்தா லன்றிப் பழா**

பதவுரை : தொடுத்த உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம் - கிளைத்த வடிவத்தால் நீண்ட உயர்வாகிய மரங்களெல்லாம், பருவத்தால் அன்றிப் பழா - (அது அது பழுக்குங்) காலம் வந்தாலல்லாமற் பழாவாம், (அது போல) அடுத்து முயன்றாலும் - மேலும் மேலும் முயற்சி செய்தாலும், ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா - முடியுங் காலம் வந்தால் அல்லாமல் எடுத்த தொழில்கள் முடியாவாம்.

பொருள் : கிளைத்த வடிவத்தால் நீண்ட உயர்வாகிய மரங்களெல்லாம், அது அது பழுக்குங் காலம் வந்தாலல் லாமற் பழாவாம். மேலும் மேலும் முயற்சி செய்தாலும், முடியுங் காலம் வந்தால் அல்லாமல் எடுத்த தொழில்கள் முடியாவாம்.

இதனது தாற்பரியம் : யாதொரு தொழிலையும் முடியுங் காலம் அறிந்து தொடங்கல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்**
**பற்றலரைக் கண்டாற் பணிவரோ - கற்றூண்**
**பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்**
**றளர்ந்து வளையுமோ தான்**

பதவுரை : கல் தூண் - கல்லுக் கம்பமானது, பெரும் பாரந்தாங்கின் பிளந்து இறுவது அல்லால் - பெரிய பாரத்தைத் தாங்கினாற் பிளந்து ஒடிவதல்லாமல், தான் தளர்ந்து வளையுமோ - தான் தளர்ந்து வளையுமோ? (வளையாது), (அதுபோல) உற்ற இடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர் - (தமக்கு ஆபத்து) வந்தவிடத்தே தம் உயிரை விடுங்குணமுடையவர், பற்ற லரைக்கண்டால் பணிவரோ - தம் பகைவரைக் கண்டால் வணங்குவரோ? (வணங்கார்)

பொருள் : கல்லுக் கம்பமானது, பெரிய பாரத்தைத் தாங்கினாற் பிளந்து ஒடிவதல்லாமல், தான் தளர்ந்து வளையுமோ? வளையாது. அது போலத் தமக்கு ஆபத்து வந்தவிடத்தே தம் உயிரை விடுங் குணமுடையவர், தம் பகைவரைக் கண்டால் வணங்கு வரோ? வணங்கார்.

இதனது தாற்பரியம் : மானமுடையவர் ஆபத்து வந்தபோது உயிரை விடினும் விடுவரேயன்றி மானத்தை விடார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. நீரளவே யாகுமா நீராம்ப றான்கற்ற**
**நூலளவே யாகுமா நுண்ணறிவு - மேலைத்**
**தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்**
**குலத்தளவே யாகுங் குணம்**

பதவுரை : நீர் ஆம்பல் நீர் அளவே ஆகும் - நீரிலிருக்கின்ற அல்லியானது அந்த நீரினுடைய உயரத்தினளவாகவே உண்டாகும், (அதுபோல) நுண் அறிவு தான் கற்ற நூல் அளவே ஆகும் - (ஒருவனுக்கு) நுட்பமாகிய அறிவானது தான் கற்ற நூலினளவாகவே உண்டாகும், தான் பெற்ற செல்வம் மேலைத் தவத்து அளவே ஆகும் - தான் பெற்ற செல்வமானது முற் பிறப்பிற் செய்த தவத்தினளவாகவே உண்டாகும், குணம் குலத்து அளவே ஆகும் - குணமானது (தான் பிறந்த) குலத்தினளவாகவே உண்டாகும்.

ஆம் - மூன்றும் அசை நிலை

பொருள் : நீரிலிருக்கின்ற அல்லியானது அந்த நீரினுடைய உயரத்தினளவாகவே உண்டாகும், அதுபோல ஒருவனுக்கு நுட்பமாகிய அறிவானது தான் கற்ற நூலினளவாகவே உண்டாகும், தான் பெற்ற செல்வமானது முற்பிறப்பிற் செய்த தவத்தினளவாகவே உண்டாகும், குணமானது தான் பிறந்த குலத்தினளவாகவே உண்டாகும்.

இதனது தாற்பரியம் : ஒருவருக்கு அறிவு நூலினளவாகவும் செல்வந் தவத்தினளவாகவுங் குணங் குலத்தினளவாகவும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. நல்லாரைக் காணபதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று**

பதவுரை : நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நல்லவரைக் (கண்களாலே) காணுதலும் நல்லதே, நல்லார் நலம் மிக்க சொல் கேட்பதுவும் நன்றே - நல்லவருடைய பயன் நிறைந்த சொல்லைக் (காதுகளினாலே) கேட்குதலும் நல்லதே, நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே - நல்லவருடைய நற்குணங்களை (வாயினாலே) பேசுதலும் நல்லதே, அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று - அந் நல்லவரோடு கூடி இருத்தலும் நல்லதே.

பொருள் : நல்லவரைக் கண்களாலே காணுதலும் நல்லதே, நல்லவருடைய பயன் நிறைந்த சொல்லைக் காதுகளினாலே கேட்குதலும் நல்லதே, நல்லவருடைய நற்குணங்களை வாயினாலே பேசுதலும் நல்லதே, அந் நல்லவரோடு கூடி இருத்தலும் நல்லதே.

இதனது தாற்பரியம் : நல்லவரைக் காணினும் அவர் சொல்லைக் கேட்பினும் அவர் குணங்களைப் பேசினும் அவரோடு கூடி இருப்பினும் நல்லறிவும் நல்லொழுக்கமுந் தலைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற**
**தீயார்சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்**
**குணங்களுரைப்பதுவுந் தீதே யவரோ**
**டிணங்கி யிருப்பதுவுந் தீது**

பதவுரை : தீயாரைக் காண்பதுவுந் தீதே - தீயவரைக் (கண்களாலே) காணுதலும் தீயதே, தீயார் திரு அற்ற சொல் கேட்பதுவுந் தீதே - தீயவருடைய பயன் இல்லாத சொல்லைக் (காதுகளினாலே) கேட்குதலுந் தீயதே, தீயார் குணங்கள் உரைப்பதுவுந் தீதே - தீயவருடைய தீக்குணங்களை (வாயினாலே) பேசுதலுந் தீயதே, அவரோடு இணங்கி இருப்பதுவுந் தீது - அத் தீயவரோடு கூடியிருந்தாலுந் தீயதே,

பொருள் : தீயவரைக் கண்களாலே காணுதலுந் தீயதே, தீயவருடைய பயன் இல்லாத சொல்லைக் காதுகளினாலே கேட்குதலுந் தீயதே, தீயவருடைய தீக்குணங்களை வாயினாலே பேசுதலுந் தீயதே, அத் தீயவரோடு கூடியிருந்தாலுந் தீயதே,

இதனது தாற்பரியம் : தீயவரைக் காணினும் அவர் சொல்லைக் கேட்பினும் அவர் குணங்களைப் பேசினும் அவரோடு கூடியிருப்பினுந் தீயறிவுந் தீயொழுக்கமுந் தலைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்**
**புல்லுக்கு மாங்கே பொசியுமாந்- தொல்லுலகில்**
**நல்லா ரொருவ ருளரே யவர்பொருட்**
**டெல்லார்க்கும் பெய்யும் மழை**

பதவுரை : நெல்லுக்கு இறைத்த நீர் - நெற்பயிரின் பொருட்டு இறைக்கப்பட்ட சலம், வாய்க்கால் வழி ஓடி - கால்வாய் வழியால் ஓடி, ஆங்குப் புல்லுக்கும் பொசியும் - அங்கே இருக்கின்ற புல்லுகளுக்குங் கசிந்தூறும், (அது போல) தொல் உலகில் நல்லார் ஒருவர் உளரே - பழமையாகிய உலகத்திலே நல்லவர் ஒருவராயினும் இருப்பாரே, அவர் பொருட்டு எல்லோருக்கும் மழை பெய்யும் - அவர் பொருட்டாகவே எல்லோருக்கும் மழை பெய்யும்.

பொருள் : நெற்பயிரின் பொருட்டு இறைக்கப்பட்ட சலம், கால் வாய் வழியால் ஓடி, அங்கே இருக்கின்ற புல்லுகளுக்குங் கசிந்தூறும், அதுபோலப் பழமையாகிய உலகத்திலே நல்லவர் ஒருவராயினும் இருப்பாரே, அவர் பொருட்டாகவே எல்லோர்க்கும் மழை பெய்யும்.

ஏ – ஆம், இரண்டும் அசை

இதனது தாற்பரியம் : நல்லவரைச் சேர்ந்த பிறரும் பயன் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்**

**விண்டுமி போனான் முளையாதாங் - கொண்ட பேர்**

**ஆற்ற லுடை யார்க்கு மாகா தளவின்றி**

**ஏற்ற கருமஞ் செயல்**

பதவுரை : பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும் - (உமி நீங்குதற்கு) முன்னே முளைப்பதும் அரிசியேயாயினும், உமி விண்டு போனால் முளையாது - உமி நீங்கிப் போனால் (அவ்வரிசி) முளையாது, (அதுபோல) கொண்ட பேர் ஆற்றல் உடையார்க்கும் - (தம்மிடத்து) நீங்காத பெரிதாகிய வல்லமையை உடையவருக்கும், அளவு இன்றி ஏற்ற கருமம் செயல் ஆகாது - துணை வலி இல்லாமல் எடுத்துக்கொண்ட தொழிலைச் செய்தல் முடியாது.

ஆம் - அசை

பொருள் : உமி நீங்குதற்கு முன்னே முளைப்பதும் அரிசியேயாயினும், உமி நீங்கிப் போனால் அவ்வரிசி முளையாது. அதுபோல தம்மிடத்து நீங்காத பெரிதாகிய வல்லமையை உடைய வருக்குந் துணைவலி இல்லாமல் எடுத்துக்கொண்ட தொழிலைச் செய்தல் முடியாது.

இதனது தாற்பரியம் : எடுத்த கருமத்தை முடித்தற்கு மிக்க வல்லமைவுடையவருக்குந் துணை வலியின்றி முடித்தல் இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்**
**உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா - கடல்பெரிது**
**மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்**
**உண்ணீரு மாகி விடும்**

பதவுரை : தாழை மடல் பெரிது - தாழம்பூ இதழ்களினாலே பெரிதாயிருக்கின்றது, மகிழ் கந்தம் இனிது - மகிழம்பூ (இதழ்களினாலே சிறிதாயினும்) (வாசனையினாலே தாம் பூவினும்) இனிதாயிருக்கின்றது, கடல் பெரிது - சமுத்திரம் பெரிதாயிருக்கின்றது, மண்ணீரும் ஆகாது - (ஆயினும் அதிலுள்ள நீர் உடம்பழுக்கைக்) கழுவுவதற்குத் தக்க நீருமாகாது. அதன் அருகு சிற்றூறல் உண் நீரும் ஆகிவிடும் - அதன் பக்கத்தே சிறிய மணற் குழியிற் சுரக்கும் ஊற்றுநீர் குடிக்கத்தக்க நீருமாகும், (ஆதலினால், உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - (ஒருவரை) உருவத்தினாலே சிறியரென்று (மதியாமல்) இருக்க வேண்டாம்.

பொருள் : தாழம்பூ இதழ்களினாலே பெரிதாயிருக்கின்றது, மகிழம்பூ இதழ்களினாலே சிறிதாயினும் வாசனையினாலே தாம் பூவினும் இனிதாயிருக்கின்றது, சமுத்திரம் பெரிதாயிருக்கின்றது, ஆயினும் அதிலுள்ள நீர் உடம்பழுக்கைக் கழுவுவதற்குத் தக்க நீருமாகாது. அதன் பக்கத்தே சிறிய மணற் குழியிற் சுரக்கும் ஊற்றுநீர் குடிக்கத்தக்க நீருமாகும், ஆதலினாலே ஒருவரை உருவத்தினாலே சிறியரென்று மதியாமல் இருக்க வேண்டாம்.

மண்ணுதல் - கழுவுதல், ஏ – அசை.

இதனது தாற்பரியம் : இவர் சிறிது பயன்படுவர் இவர் பெரிது பயன்படுவர் என்றும், இவர் ஒரு விதத்தாலும் பயன்படார் இவர் பல விதத்தாலும் பயன் படுவர் என்றும், அவரவர் குணங்களாலன்றி உருவத்தால் அறிதல் கூடாது.

தாழை - தென்னை யென்பாருமுளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே**
**நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய**
**மாட்டா தவனன் மரம்**

பதவுரை : கவை ஆகி - கிளைகளை உடையவைகளாகியும், கொம்பு ஆகி - கொம்புகளை உடையவைகளாகியும், காட்டு அகத்து நிற்கும் அவை நல்ல மரங்கள் அல்ல- காட்டினுள்ளே நிற்கின்ற அந்த மரங்கள் எல்லாம் நல்ல மரங்கள் அல்ல, சபை நடுவே நீட்டு ஓலையை வாசியா நின்றான் - சபையின் நடுவே (ஒருவர்) நீட்டிய ஓலையை வாசிக்கமாட்டாமல் நின்றவனும், குறிப்பு அறிய மாட்டாதவன் - (ஒருவருடைய) குறிப்பை அறிய மாட்டாதவனுமே, நல் மரம் - நல்ல மரங்களாவார்.

பொருள் : கிளைகளை உடையவைகளாகியுங் கொம்புகளை உடையவைகளாகியுங் காட்டினுள்ளே நிற்கின்ற அந்த மரங்கள் எல்லாம் நல்ல மரங்கள் அல்ல. சபையின் நடுவே ஒருவர் நீட்டிய ஓலையை வாசிக்க மாட்டாமல் நின்றவனும் ஒருவருடைய குறிப்பை அறிய மாட்டாதவனுமே நல்ல மரங்களாவார்.

ஏ -இரண்டும் அசை

இதனது தாற்பரியம் : கல்வியில்லாதவனும் ஒருவருடைய குறிப்பை அறியாதவனும் ஆறறிவுடைய மனிதராய்ப் பிறந்தாராயினும் ஓரறிவுடைய மரத்தினுங் கடையாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி**
**தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்**
**பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி**

பதவுரை : கல்லாதான் கற்ற கவி - (இலக்கண இலக்கியங்களைக் கற்றவர் பிழையற்ற கவியைச் சொல்லிப் பொருள் உரைக்க அதைப் பார்த்துக்கொண்டிருந்து அவைகளைக்) கற்றறி யாதவன் (தன்னையுங் கற்றவனாகவே நினைத்துத் தான்) கற்ற (பிழையாகிய) கவியைச் சொல்லிப் பொருள் உரைத்தல், கானம் மயில் ஆடக் கண்டு இருந்த வான்கோழி - காட்டில் உள்ள மயிலானது (தனது அழகுள்ள கலாபத்தை விரித்து) ஆட (அதைப்) பார்த்துக் கொண்டிருந்த வான்கோழி யானது, தானும் அது ஆகப் பாவித்து - தானும் அம்மயி லாகவே நினைத்து, தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலும் - தானும் தனது அழகில்லாத சிறகை விரித்து ஆடினாற் போலும்.

ஏ – அசை

பொருள் : இலக்கண இலக்கியங்களைக் கற்றவர் பிழையற்ற கவியைச் சொல்லிப் பொருள் உரைக்க அதைப் பார்த்துக் கொண் டிருந்து அவைகளைக் கற்றறியாதவன் தன்னையுங் கற்றவனாகவே நினைத்துத் தான் கற்ற பிழையாகிய கவியைச் சொல்லிப் பொருள் உரைத்தல், காட்டில் உள்ள மயிலானது தனது அழகுள்ள சிறகை விரித்து ஆட அதைப் பார்த்துக் கொண்டிருந்த வான்கோழியானது தானும் அம் மயிலாகவே நினைத்துத் தானுந் தனது அழகில்லாத சிறகை விரித்து ஆடினாற் போலும்.

இதனது தாற்பரியம் : கற்றவருடைய தொழிலை மேற்கொண்டானா யினுங் கல்லாதவன் கற்றவனாகான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி**
**ஆங்கதனுக் காகார மானாற்போல் - பாங்கறியாப்**
**புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரங்**
**கல்லின்மே லிட்ட கலம்**

பதவுரை : வரிவேங்கைப் புலிநோய் தீர்த்த விடகாரி - வரிகளையுடைய வேங்கைப் புலிக்கு நஞ்சு நோயைத் தீர்த்த விஷவைத்தியன், ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால் போல் பாங்கு அறியா - அப்பொழுதே அப்புலிக்கு இரையானாற் போலத்தான் அழியுந்தன்மையை (ஆலோசித்து) அறியாமல், புல் அறிவா ளர்க்குச் செய்த உபகாரம், அற்ப புத்தியுடைய அவருக்குச் செய்த உபகாரமுங் கல்லின்மேல் இட்டகலம் - கல்லின் மேலே போடப்பட்ட மட்பாத்திரம் போல அழிந்துபோம்.

பொருள் : வரிகளையுடைய வேங்கைப் புலிக்கு நஞ்சு நோயைத் தீர்த்த விஷ வைத்தியன், அப்பொழுதே அப்புலிக்கு இரையானாற் போலத்தான் அழியுந்தன்மையை ஆலோசித்து அறியாமல், அற்ப புத்தியுடைய அவருக்குச் செய்த உபகாரமுங் கல்லின் மேலே போடப்பட்ட மட்பாத்திரம் போல அழிந்துபோம்.

இதனது தாற்பரியம் : மூடருக்கு உபகாரஞ் செய்யின், அவ்வுபகாரம் அழிவதன்றி, அவ்வுபகாரத்தைச் செய்தவனும் அழிவன்.

விஷஹாரி என்னும் வடமொழி விடகாரி என்றாயிற்று. அதற்கு விடத்தை அரிப்பவன் என்பது பொருள். போல் பாங்கு என்பது போலும் பாங்கு என விரியும்.

கல்லின் மேலிட்ட கலம் என்பதற்குக் கல்லின் மேலே தாக்கிய மரக்கலம் போலும் எனப் பொருள் சொல்லினும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்**

**கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்**

**ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்**

**வாடி யிருக்குமாங் கொக்கு**

பதவுரை : கொக்கு - கொக்கானது, மடைத் தலையில் ஓடும் மீன் ஓட - நீர் மடையினிடத்து ஓடுஞ் சிறுமீன்கள் எல்லாம் ஓடவிட்டு, உறுமீன் வரும் அளவும் வாடி இருக்கும் - பெருமீன் வரும் வரையும் அடங்கி இருக்கும், (அது போல) அடக்கம் உடையார் - (தமக்கு எதிரிகளாகத் தகாதவர் எதிர்ப்படினும் ஓடிப்போகவிட்டு எதிரிகளாகத் தக்கவர் எதிர்ப்படும் வரையும்) அடங்கியிருக்குங் குணமுடையவரை, அறிவு இலர் என்று எண்ணி - அறிவில்லாதவரென்று கருதி, கடக்கக் கருதவும் வேண்டா - வெல்லுதற்கு நினைக்கவும் வேண்டுவதில்லை.

பொருள் : கொக்கானது, நீர் மடையினிடத்து ஓடுஞ் சிறுமீன்கள் எல்லாம் ஓடவிட்டு, பெருமீன் வரும் வரையும் அடங்கி இருக்கும் அதுபோலத் தமக்கு எதிரிகளாகத் தகாதவர் எதிர்ப்படினும் ஓடிப்போகவிட்டு எதிரிகளாகத் தக்கவர் எதிர்ப்படும் வரையும் அடங்கியிருக்கும் குணமுடையவரை, அறிவில்லாதவரென்று கருதி, வெல்லுதற்கு நினைக்கவும் வேண்டுவதில்லை.

ஆம் - அசை

இதனது தாற்பரியம் : அடக்கமுடையவரது வலிமையை அறியாது அவரை வெல்ல நினைப்பவனுக்குத்தப்பாது கேடு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. அற்ற குளத்தி னறுநீர்ப் பறவை போல்**
**உற்றுழித் தீர்வா ருறவல்லர் - அக்குளத்திற்**
**கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே**
**ஒட்டி யுறுவா ருறவு**

பதவுரை : அற்ற குளத்தின் அறு நீர்ப்பறவைபோல் - (நீர்) வற்றிய குளத்தினின்றும் நீங்கிப் போகின்ற நீர்வாழ் பறவைகள் போல, உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - (ஒருவனுக்கு வறுமை) வந்தபொழுது நீங்குவோர் உறவாகார். அக் குளத்திற் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே - அந்தக் குளத்திலே கொட்டியும் அல்லியும் நெய்தலும் போலவே, ஒட்டி உறுவார் உறவு - (தாமும் வருத்தத்தை) அநுபவித்துக் கொண்டு (அவனை) விட்டு நீங்காதவரே உறவாவார்.

பொருள் : நீர் வற்றிய குளத்தினின்றும் நீங்கிப் போகின்ற நீர்வாழ் பறவைகள் போல, ஒருவனுக்கு வறுமை வந்த பொழுது நீங்குவோர் உறவாகார். அந்தக் குளத்திலே கொட்டியும் அல்லியும் நெய்தலும் போலவே, தாமும் வருத்தத்தை அநுபவித்துக் கொண்டு அவனை விட்டு நீங்காதவரே உறவாவார்.

இதனது தாற்பரியம் : தாம் செல்வ நீங்கி வறியாராயவிடத்துந் தம்மைக் கைவிடாதவரையே உறவினராகக் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18. சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்**
**றல்லாதார் கெட்டாலங்கு கென்னாகுஞ் - சீரிய**
**பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகு**
**மண்ணின் குடமுடைந்தக் கால்**

பதவுரை : சீரியர் கெட்டாலும் சீரியரே - மேலோர் (தம்முடைய செல்வங்) கெட்டாலும் மேலோராகவே மதிக்கப்படுவார், சீரியர் அல்லாதார் கெட்டால் அங்கு என் ஆகும் - கீழோர் (தம்முடைய செல்வங்) கெட்டால் அப்பொழுது அவருக்கு என்ன மதிப்பு உண்டாகும், சீரிய பொன்னின் குடம் உடைந்தால் பொன் ஆகும் - சிறப்பினையுடைய பொன்னால் ஆகிய குடம் உடைந்தாலும் பழைய பொன்னேயாகும். மண்ணின் குடம் உடைந்தக்கால் என் ஆகும் - மண்ணால் ஆகிய குடம் உடைந்தால் (அதற்கு) என்ன மதிப்பு உண்டகும்.

மற்றும் – அசை

பொருள் : மேலோர் தம்முடைய செல்வங் கெட்டாலும் மேலோராகவே மதிக்கப்படுவார், கீழோர் தம்முடைய செல்வங் கெட்டால் அப்பொழுது அவருக்கு என்ன மதிப்பு உண்டாகும்? சிறப்பினையுடைய பொன்னால் ஆகிய குடம் உடைந்தாலும் பழைய பொன்னேயாகும். மண்ணால் ஆகிய குடம் உடைந்தால் என்ன மதிப்பு உண்டகும்?

இதனது தாற்பரியம் : செல்வம் இழந்த காலத்தினும் மேலோர் நன்கு மதிக்கப்படுவர்; கீழோர் செல்வம் இழந்த காலத்தில் அவமதிக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலில்**
**நாழி முகவாது நானாழி - தோழி**
**நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்**
**விதியின் பயனே பயன்**

பதவுரை : ஆழ் கடலின் ஆழ அமுக்கி முக்கினும் - ஆழமாகிய சமுத்திரத்தினுள்ளே முழுக அமுக்கி மொண்டாலும், நாழி நால் நாழி முகவாது - ஒரு நாழியானது நாலு நாழி சலத்தை மொள்ளாது. (அதுபோல) தோழி - தோழியே, நிதியுங் கணவனும் நேர்படினும் (பெண்களுக்குத்) திரவியமும் நாயகனும் நேர்பட்டாலும், தந்தம் விதியின் பயனே பயன் - அவரவருடைய ஊழினளவாகிய பயனே (அனுபவிக்கப்படும்) பயனாகும். (நாழி - படியளவு)

பொருள் : ஆழமாகிய சமுத்திரத்தினுள்ளே முழுக அமுக்கி மொண் டாலும், ஒரு நாழியானது நாலு நாழி சலத்தை மொள்ளாது. அதுபோலத் தோழியே! பெண்களுக்குத் திரவியமும் நாயகனும் நேர்பட்டாலும், அவரவருடைய ஊழினளவாகிய பயனே அனுபவிக்கப்படும் பயனாகும்.

இதனது தாற்பரியம் : எல்லாப் பொருளுங் கிடைத்தாலும் ஊழினள வேயன்றி அதிகமாக அநுபவித்தல் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா**
**உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா**
**மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்**
**அம்மருந்து போல்வாரு முண்டு**

பதவுரை : வியாதி உடன் பிறந்தே கொல்லும் - வியாதியானது உடன் பிறந்தே கொல்லும், உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா - (ஆதலால்) உடன் பிறந்தவரே துணையா வோரென்று நம்பி இருக்க வேண்டுவதில்லை, உடன் பிறவா மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும் - உடன் பிற வாமற் பெரிய மலையில் உள்ள மருந்தே அந்த வியாதியைத் தீர்க்கும், அம்மருந்து போல் வாரும் உண்டு - (ஆதலால்) அந்த மருந்துபோல் (அந்நியராய் இருந்தும் ஆபத்திலே) உதவி செய்வாருஞ் சிலர் உண்டு.

பொருள் : வியாதியானது உடன் பிறந்தே கொல்லும் ஆதலால் உடன் பிறந்தவரே துணையாவோரென்று நம்பி இருக்க வேண்டுவ தில்லை, உடன் பிறவாமற் பெரிய மலையில் உள்ள மருந்தே அந்த வியாதியைத் தீர்க்கும் ஆதலால் அந்த மருந்துபோல் அந்நியராய் இருந்தும் ஆபத்திலே உதவி செய்வாருஞ் சிலர் உண்டு.

இதனது தாற்பரியம் : உடன் பிறந்தாருள்ளே தீமை செய்வோரும் அந்நியருள்ளே நன்மை செய்வோரும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை**
**இல்லாளு மில்லாளே யாமாயின் - இல்லாள்**
**வலி கிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்**
**புலி கிடந்த தூறாய் விடும்**

பதவுரை : இல்லாள் அகத்து இருக்க - (நற்குண நற்செய்கைகளை யுடைய) மனையாள் வீட்டில் இருப்பாளாயின், இல்லாதது ஒன்று இல்லை (அவ்வீட்டில்) இல்லாத பொருள் ஒன்று மில்லை. இல்லாளும் இல்லாளே ஆயின் - மனையாள் இல்லாமற் போனாளாயினும், இல்லாள் வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் - மனையாள் கடுமை பொருந்திய சொற் களைச் சொல்வாளாயினும், அவ்வில் புலி கிடந்த தூறு ஆய் விடும் - அவ்வீடு புலிதங்கிய புதல் போல் ஆய் விடும்.

ஆம் - அசை, புதல் - புதர்

பொருள் : நற்குண நற்செய்கைகளையுடைய மனையாள் வீட்டில் இருப்பாளாயின், அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்று மில்லை. மனையாள் இல்லாமற் போனாளாயினும், மனையாள் கடுமை பொருந்திய சொற்களைச் சொல்வா ளாயினும் அவ்வீடு புலி தங்கிய புதல் போல் ஆய் விடும்.

இதனது தாற்பரியம் : நற்குண நற்செய்கைகளையுடைய மனையாள் இருக்கும் வீடே எல்லாப் பொருளும் நிறைந்த வீடு; அஃதல்லாத வீடு யாவருக்குங் கிட்டுதற்கு அச்சத்தை விளைவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22. எழுதியவா றேகா ணிரங்கும்மட நெஞ்சே**
**கருதியவா றாமோ கருமங் - கருதிப்போய்க்**
**கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கயீந்ததேன்**
**முற்பவத்திற் செய்த வினை**

பதவுரை : இரங்கும் மடம் நெஞ்சே - வருந்துகின்ற அறியாமை பொருந்திய மனமே, கருதிப் போய்க் கற்பகத்தைச் சேர்ந் தோர்க்கு - (நல்ல பயனைப் பெறலாமென்று நினைத்துப் போய்க் கற்பகதருவை அடைந்தவருக்கு, காஞ்சிரங்காய் ஈந்ததேல் - (அது) எட்டிக்காயைக் கொடுத்ததாயின், முற் பவத்திற் செய்தவினை - (அதற்குக் காரணம்) அவர் முற் பிறப்பிற் செய்த தீவினையாகும். கருமங் கருதியவாறு ஆமோ - செய் தொழில்கள் (நீ) நினைத்தபடியே ஆகுமோ, எழுதியவாறே காண் - (கடவுள்) விதித்தபடியே ஆகும், என்று அறிவாயாக,

பொருள் : வருந்துகின்ற அறியாமை பொருந்திய மனமே, நல்ல பயனைப் பெறலாமென்று நினைத்துப் போய்க் கற்பகதருவை அடைந்தவருக்கு, அது எட்டிக்காயைக் கொடுத்ததாயின், அதற்குக் காரணம் அவர் முற்பிறப்பிற் செய்த தீவினை யாகும். செய் தொழில்கள் நீ நினைத்தபடியே ஆகுமோ? கடவுள் விதித்த படியே ஆகும் என்று அறிவாயாக.

இதனது தாற்பரியம் : செய்தொழில்கள் ஊழியின்படியன்றி அவரவர் நினைத்தபடி முடியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்**
**பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரோ - விற்பிடித்து**
**நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே**
**சீரொழுகு சான்றோர் சினம்**

பதவுரை : கயவர் கடுஞ் சினத்துக் கல் பிளவோடு ஒப்பர் - கீழோர் (தம்முள்ளே) கடுங் கோபத்தினால் வேறுபட்டால், கல்லினுடைய பிளவுகளைப் போல்வர் (திரும்பிக் கூடார்), பொன் பிளவோடு ஒப்பாரும் போல்வார் - (அப்படி வேறுபட்ட போது) பொன்னினுடைய பிளவுகளோடு ஒப்பாவாரும் ஒப்பாவார் (ஒருவர் கூட்டக் கூடுவார்), சீர் ஒழுகு சான்றோர் சினம் - சிறப்புமிக்க அறிவுடையோருடைய கோபம், வில் பிடித்து நீர்கிழிய எய்த வடுப் போல மாறும் - வில்லைப் பிடித்து (அம்பினாலே) சலம் பிளக்க எய்த (அதனுடைய) பிளவுகள் போல (அப்போதே) நீங்கும்.

ஏ - இரண்டும் அசை

பொருள் : கீழோர் தம்முள்ளே கடுங்கோபத்தினால் வேறுபட்டாற் கல்லினுடைய பிளவுகளைப் போல்வர். திருப்பிக்கூடார். அப்படி வேறுபட்ட போது பொன்னினுடைய பிளவுகளோடு ஒப்பாவாரும் ஒருவர் கூட்டக் கூடுவார். சிறப்புமிக்க அறிவுடையோருடைய கோபம், வில்லைப் பிடித்து அம்பினாலே சலம் பிளக்க எய்த அதனுடைய பிளவுகள் போல அப்போதே நீங்கும்.

இதனது தாற்பரியம் : கோபத்தினால் வேறுபட்டவிடத்துக் கடையாயர் எக்காலத்துங் கூடார்; இடையாயர் ஒருவர் கூட்டக் கூடுவர் தலையாயர் பிரிந்த அப்பொழுதே கூடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24. நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்**
**காக்கை யுகக்கும் பிணம்**

பதவுரை : கயத்தின் நல் தாமரை நல் அன்னம் சேர்ந்தால் போல் - குளத்தில் உள்ள நல்ல தாமரைப் பூவை நல்ல அன்னப் பறவை சேர்ந்தாற்போல, கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்றறிந்தவரைக் கற்றறிந்தவரே விரும்பிச் சேர்வார், முது காட்டிற் பிணம் காக்கை உகக்கும் - சுடு காட்டிலே கிடக்கின்ற பிணத்தைக் காக்கையே இச்சிக்கும், (அதுபோல) கற்பு இலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் - கல்வியில்லாத மூடரை மூடரே கொண்டாடுவர்.

பொருள் : குளத்தில் உள்ள நல்ல தாமரைப் பூவை நல்ல அன்னப் பறவை சேர்ந்தாற்போல, கற்றறிந்தவரைக் கற்றறிந்தவரே விரும்பிச் சேர்வார், சுடுகாட்டிலே கிடக்கின்ற பிணத்தைக் காக்கையே இச்சிக்கும், அதுபோலக் கல்வியில்லாத மூடரை மூடரே கொண்டாடுவர்.

இதனது தாற்பரியம் : கற்றவரோடு கற்றவரே சிநேகஞ் செய்வர், மூடரோடு மூடரே சிநேகஞ் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரைந்துறையும்**
**அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சிற்**
**கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்**
**கரவிலா நெஞ்சத் தவர்**

பதவுரை : நாகம் தான் நஞ்சு உடைமை அறிந்து கரந்து உரையும் - நல்ல பாம்பு தான் விஷம் உடையதாயிருத்தலை அறிந்து ஒளித்துக் கொண்டு இருக்கும், நீர்ப் பாம்பு அஞ்சாப்புறம் கிடக்கும் - (தன்னிடத்தில் விஷம் இல்லாத) நீர்ப்பாம்பு அஞ்சாமல் வெளியிலே கிடக்கும், (அவை போல) நெஞ்சிற் கரவு உடையாவர் தம்மைக் கரப்பர் - மனத்தினுள்ளே வஞ்ச னையை உடையவர் தம்மைத் தாமே மறைப்பார், கரவு இலா நெஞ்சத்தவர் கரவார் - வஞ்சனை இல்லாத மனத்தை உடையவர் (அப்படித் தம்மை) மறைக்கமாட்டார்.

பொருள் : நல்ல பாம்பு தான் விஷம் உடையதாயிருத்தலை அறிந்து ஒளித்துக்கொண்டு இருக்கும்; தன்னிடத்தில் விஷம் இல்லாத நீர்ப்பாம்பு அஞ்சாமல் வெளியிலே கிடக்கும். அதனைப் போல மனத்தினுள்ளே வஞ்சனையை உடையவர் தம்மைத் தாமே மறைப்பார்; வஞ்சனை இல்லாத மனத்தை உடையவர் மறைக்க மாட்டார்.

இதனது தாற்பரியம் : வஞ்சனையுடையவர் மறைந்தொழுகுவர் வஞ்சனை யில்லாதவர் வெளிப்பட்டொழுகுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்**
**தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்றவிட மெல்லாஞ் சிறப்பு**

பதவுரை : மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின் - அரசனையுங் குற்றந்தீரக் கற்ற வித்துவானையும் ஆராய்ந்து பார்த்தால், மன்னனிற் கற்றோன் சிறப்பு உடையன் - அரசனிலும் வித்துவானே சிறப்பை உடையவனாவான். மன்னற்குத் தன் தேசம் அல்லாற் சிறப்பு இல்லை - அரசனுக்கு அவனுடைய தேசத்தில் அல்லாமல் (அந்நிய தேசங்களிலே) சிறப்பு இல்லை. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு - வித்துவானுக்கு (அவன்) போன தேசங்களெல்லாவற்றினுஞ் சிறப்பு உண்டாகும்.

பொருள் : அரசனையுங் குற்றந்தீரக் கற்ற வித்துவானையும் ஆராய்ந்து பார்த்தால், அரசனிலும் வித்துவானே சிறப்பை உடையவனாவான். அரசனுக்கு அவனுடைய தேசத்தில் அல்லாமல் அந்நிய தேசங்களிலே சிறப்பு இல்லை. வித்துவானுக்கு அவன் போன தேசங்களெல்லாவற்றினுஞ் சிறப்பு உண்டாகும்.

இதனது தாற்பரியம் : அரசனிலும் வித்துவானே சிறப்புடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்**
**அல்லாத மாந்தர்க் கறங்கூற்ற - மெல்லிய**
**வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே**
**இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்**

பதவுரை : மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் - மெல்லிய வாழை மரத்துக்கு அது ஈன்ற காயே இயமனாகும். (அது போல) கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம் - கற்றறியாத மனிதருக்குக் கற்றறிந்தவருடைய உறுதிச் சொல்லே இயமனாகும், அல்லாத மாந்தர்க்கு அறங் கூற்றம் - (தருமமுடையவர்) அல்லாத மனிதருக்குத் தருமமே இயமனாகும், இசைந்து இல்லிற்கு ஒழுகாப் பெண் கூற்றம் - (கணவன் கருத்துக்கு) உடன்பட்டு இல்லறத்தில் ஒழுகாத மனையாளே (அக்கணவனுக்கு) இயமனாகும்.

ஏ – அசை

பொருள் : மெல்லிய வாழை மரத்துக்கு அது ஈன்ற காயே இயமனாகும். அதுபோலக் கற்றறியாத மனிதருக்குக் கற்றறிந்தவருடைய உறுதிச் சொல்லே இயமனாகும். தருமமுடையவர் அல்லாத மனிதருக்குத் தருமமே இயமனாகும், கணவன் கருத்துக்கு உடன்பட்டு இல்லறத்தில் ஒழுகாத மனையாளே அக் கணவனுக்கு இயமனாகும்.

இதனது தாற்பரியம் : கற்றறிந்தவருடைய உறுதி மொழியினாலே கல்லாதவருக்குந் தருமத்தினாலே பாவிகளுக்குங் கற்பு நிலையில்லாத மனையாளாலே கணவனுக்குந் துன்பம் விளையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்துங்**

**கந்தங் குறைபடா தாதலாற் - றந்தந்**

**தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கேட்டான்**

**மனஞ்சிறிய ராவரோ மற்று**

பதவுரை : மெல் சந்தனக்குறடு - மிருதுவாகிய சந்தனக்கட்டையானது, தான் தேய்ந்த காலத்துங் கந்தங் குறைபடாது - தான் தேய்ந்து போன காலத்திலுந் தன்னுடைய பரிமளத்திற் குறையாது, ஆதலால் - ஆதலினாலே, தார்வேந்தர் - சேனையை உடைய அரசர்கள், கேட்டால் தந்தம் தனம் சிறியர் ஆயினும் - கேட்டினாலே தங்கள் தங்கள் செல்வத்தினாலே குறைந்தவரா னாலும், மனஞ்சிறியர் ஆவரோ - மனவலிமையிலே குறைந்த வராவரோ? (ஆகார்).

பொருள் : மிருதுவாகிய சந்தனக்கட்டையானது, தான் தேய்ந்து போன காலத்திலுந் தன்னுடைய பரிமளத்திற் குறையாது, ஆதலி னாலே, சேனையை உடைய அரசர்கள், கேட்டினாலே தங்கள் தங்கள் செல்வத்தினாலே குறைந்தவரானாலும், மன வலிமையிலே குறைந்தவராவரோ? ஆகார்.

இதனது தாற்பரியம் : அரசர்கள் செல்வத்திற் குறைந்தாலும் மன வலிமையிற் குறையார்கள். (கேட்டினாலே - வறுமையினாலே).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29\. மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல**
**உருவு உயர்குலமு மெல்லாந் - திருமடந்தை**
**ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து**
**போம்போ தவளோடும் போம்**

பதவுரை : மருவு இனிய சுற்றமும் - தழுவிய இனிய உறவும், வான் பொருளும் - மேலாகிய பொருளும், நல்ல உருவும் - நல்ல அழகும், உயர் குலமும் எல்லாம் - உயர்வாகிய குலமும் என்னும் இவைகளெல்லாம், திருமடந்தை ஆம்போது அவளோடும் ஆகும் - சீதேவி வந்து கூடும் பொழுது அவளுடனே வந்து கூடும், அவள் பிரிந்து போம்போது அவளோடும் போம் - அவள் நீங்கிப் போம் பொழுது அவளுடனே நீங்கிப்போகும்.

பொருள் : இனிய உறவும் மேலாகிய பொருளும் நல்ல அழகும் உயர்வாகிய குலமும் என்னும் இவைகளெல்லாம் சீதேவி வந்து கூடும் பொழுது அவளுடனே வந்து கூடும். அவள் நீங்கிப் போம் பொழுது அவளுடனே நீங்கிப்போகும்.

இதனது தாற்பரியம் : சுற்றமும் பொருளும் அழகும் உயர் குலமும் நிறைவுடையனவல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30\. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர் - மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்**

பதவுரை : மரம் - மரங்களானவை, மாந்தர் குறைக்கும் தனையும் - (தம்மை) மனிதர் வெட்டுமளவும், குளிர் நிழலைத் தந்து மறைக்கும் - (அவருக்குங்) குளிர்ச்சியாகிய நிழலையே கொடுத்து (வெய்யிலை அவர் மேலே பட வொட்டாமல்) மறைக்கும், (அதுபோல) அறிவு உடையோர் - அறிவு டையவர், சாந்தனையும் தீயனவே செய்திடினும் - (தாம் இறந்து போமளவும் தமக்கு இறந்து போகத்தக்க) தீங்குகளையே (பிறர்) செய்தாராயினும், தாம் அவரை ஆம் தனையுங் காப்பர் - தாம் அவரையும் (தம்மாலே) ஆகுமளவும் (நன்மையே செய்து) காப்பர்.

ஆம் - அசை. கண்டீர் - முன்னிலை அசை.

பொருள் : மரங்களானவை தம்மை மனிதர் வெட்டுமளவும் அவருக்குங் குளிர்ச்சியாகிய நிழலையே கொடுத்து வெய்யிலை அவர் மேலே படவொட்டாமல் மறைக்கும்; அறிவுடையவர் தாம் இறந்து போமளவுந் தமக்கு இறந்து போகத்தக்க தீங்கு களையே செய்தாராயினும் தாம் அவரையுந் தம்மாலே ஆகுமளவும் நன்மை செய்து காப்பர்.

இதனது தாற்பரியம் : அறிவுடையவர் தமக்குத் தீங்கு செய்வோருக்கும் நன்மையே செய்வர்.

வாக்குண்டாம் மூலமும் உரையும் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN: 978-955-9233-85-5

Guru Printers - Thirunelvely, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org